பொது நிருவாகச் சுற்று நிருபம், இல: 32/89

பொது நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
1989, மே 11ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

1980 யூலை மாதத்தில் பதவிகளை வெறிதாக்கிய
அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபனங்களின்
<u>பணியாளர்கள் ஆகியோருக்கு நிவாரணம் வழங்குதல்.</u>

01. 1980 யூலை மாதத்தில் தமது பதவிகளை வெறிதாக்கிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் அரசாங்கம் பின்வரும் தீர்மானங்கள் சிலவற்றை எடுத்துள்ளது.

(1) 1980 யூலை மாதத்தில் பதவி விலகல் செய்து மீண்டும் சேவையில் நிறுவப் பெறாதவர்கள், இளைப்பாறல் மற்றும் ஏனைய நிவாரணம் வழங்கப் பெறாதவர்கள் ஆகியோர் யாவருக்கும் மிகவும் சாதகமான ஓய்வூதிய நலன்கள் வழங்கப்படும். இவ்வூழியர்கள் யாவரும் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி வரை இடையறாச் சேவையுள்ளவர்களாகக் கருதப்படுவர். 1980 யூலை மாதம் தொட்டு அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட நாள்வரை சம்பள ஏற்றங்கள் முறைப்படி கொடுக்கப்பட்டு அவர்தம் சம்பளத்துக்கு சேர்ந்துள்ளன என்னும் உத்தேச அடிப்படையில் அவர்களது ஓய்வூதியங்களும், இளைப்பாறல் நலன்களும் கணிக்கப்படும். ஓய்வூதியத்தை அல்லது இளைப்பாறல் நலன்களை வழங்குவதற்குரிய சேவைக்காலம் கணக்கிடுமிடத்து, அமுலுக்கு வரும் இளைப்பாறல் திகதியாக அல்லது சேவை முடிவுறுத்தல் திகதியாக இந்த அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி அல்லது குறிப்பிட்ட உத்தியோகத்தர் ஐம்பத்தைந்து வயதினைப் பூர்த்தி செய்த திகதி எடுத்துக் கொள்ளப்படும்.

(2) 366ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் வண்ணம் வழங்கப் பெற்ற இளைப்பாறல் மற்றும் ஏனைய நலன்களைப் பெற்றுக் கொண்டோர்கள் விடயத்தில் அவர்கள் ஏலவே பெற்றுள்ள ஓய்வூதியங்கள், பணிக் கொடைகள் மற்றும் பிற நலன்கள் யாவும் மேற்போந்த நியதிகளுக்கேற்ப மீள ஆய்ந்து சரிசெய்யப்படும்.

(3) 1980ஆம் ஆண்டு யூலை மாதத்தில் அரசாங்க, உள்ளூராட்சி, கூட்டுத்தாபனத்துறைகளில் நிரந்தர நிலையிலோ தற்காலிக நிலையிலோ பணிக்கமர்த்தப்பெற்றிருந்த ஊழியர்களின் ஓய்வூதியங்களும் ஏனைய இளைப்பாறல் நலன்களும் இந்நோக்கத்திற்கென கணிக்கப்படுமிடத்து இவ்வமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி வரை அவர்கள் தொடர்ந்து சேவையாற்றியுள்ளவர்களாக கருதப்படுவர்.

(4) அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களில் சேவையாற்றிய பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பெற்றுக் கொண்ட கடன் தொகைகள் மீதான வட்டி அறவிடப்படமாட்டாது. ஆனால் கடன்களுக்குரிய முதலாவது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கட்குக் கொடும்தியான ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் பிற கொடுப்பனவு களிலிருந்து கழிக்கப்படும்.

(5) இளைப்பாறலுக்கான விருப்பத்தைத் தெரிவிக்காமல் அல்லது பணிக்கொடை களையோ பிற நலன்களையோ பெற்றுக் கொள்ளாமல் இறந்த ஊழியர் களது மனைவி/கணவன்மார்களும் அண்டி வாழ்வோர்களும் இறந்தவர் இத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதி வரை அல்லது ஐம்பத்தைந்து வயது நிரம்பும் திகதி வரை தொடர்ந்து சேவையில் இருந்தவராகக் கருதப்பட்டு ஓய்வூதியத்தினையும், பணிக்கொடையினையும் பிற நலன்களையும் பெறுதற்கு உரித்துடையவராவர்.

(6) மேற்போந்த நியதிகளின் வண்ணம் இளைப்பாறியவர்களாகக் கருதப்பெறும் ஊழியர்கள் யாவரும் அவர்களது வயது, அனுபவம், தகைமைகள், வினைத்திறன் ஆகியவற்றுக்கேற்ப, மீண்டும் சேவையில் அமர்த்தப்படல் தகவுடையவர்களாக வும் கணிக்கப்பெறுவர். அவர்கள் அரசாங்கத் திணைக்களங்களிலோ, உள் ளூராட்சி அதிகார சபைகளிலோ கூட்டுத்தாபனங்களிலோ நியதிச்சட்ட சபைகளிலோ மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படலாம். எனினும் மீள சேவை -க்கு அமர்த்தும் விண்ணப்பங்கள் யாவும் அமைச்சரவையால் நியமிக்கப் பட்டுள்ள இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களின் மீள் சேவைக்கு அமர்த்துகைக்கான செயலாளர்கள் துணைக் குழுவின் அங்கீகாரத்தை நாடுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(7) 1980 யூலை மாதத்திலிருந்து சேவையில் மீள நிறுவப் பெற்ற அரசாங்க உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனத் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களின் மீது பல்வேறு பொது நிருவாகச் சுற்றறிக்கைகளின் வாயிலாக விதிக்கப் பெற்றிருந்தால் மட்டுப்பாடுகள் வாபஸ் பெறப்படும்.

(8) 1980 யூலை மாதத்தில் பதவி விலகல் செய்த தனியார்துறை ஊழியர்கள் அனைவருக்கும் அரசாங்கத்துறை ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற இதே சலுகைகளை வழங்கி நிவாரணம் அளிக்க வேண்டுமென தனியார்துறை வே கொள்வோர்களை தொழிலமைச்சு கேட்டுக் கொள்ளும்.

பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தொடர்பில் தகவல்கள் சிலவற்றை சேகரிப்பது அவசியமாகிறது. அது தொடர்பில் பத்திரிகைகளில் வெளியிடப்பெறும் அறிவித்தலின் பிரதி ஒன்றையும் உதவி அரசாங்க அதிபர்கள் யாவருக்கும் அனுப்பப்படும் சுற்று நிருபத்தின் பிரதி ஒன்றையும் தங்கள் தகவல் பொருட்டு இத்துடன் அனுப்பி வைக் கிறேன். உதவி அரசாங்க அதிபர்களின் அலுவலகங்களில் கிடைக்கத் தக்கதாக நிவாரணப் படிவங்களுக்கு மேலதிகமாக நான் தங்களது அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு வழங்குவதற்காக அத்தகைய படிவங்களின் தொகுதி ஒன்றையும் இத்துடன் அனுப்பி வைக்கிறேன்.

03. பாதிக்கப்பட்ட ஆள்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றதன் மேல் நான் அந்த விண்ணப்பங்களின் பிரதிகளை, மேற்சொன்ன அமைச்சரவைத் தீர்மானங்களைச் செயற்படுத்துவது தொடர்பிலான குறித்த அறிவுறுத்துரைகளுடன் அனுப்பி வைப்பேன்.

(சிறில் கமகே)
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.